[2009 பிப்ரவரி 23

**திரு. விடியல் எஸ். சேகர்:** பேரூராட்சியை நகராட்சியாக ஆக்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்து, இந்த நல்ல அறிவிப்புக்கு நன்றி பாராட்டி முடிக்கிறேன். நன்றி, வணக்கம். ஜெய் ஹிந்த்!

## 5. இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்தும், சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் காவல் துறையினர் மற்றும் வழக்கறிஞர்களிடையே ஏற்பட்ட மோதல் குறித்தும், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கண்டன ஊர்வலங்கள் நடத்த அனுமதி கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இலங்கைத் தமிழர்களுக்காகப் பல்வேறு இயக்கங்கள் நடத்தப்படுகின்றன. இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாக இன்றைய தினம் மாநிலம் முழுவதிலும் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக அனுமதி கோரப்பட்டு, அது நடைபெறுவதற்குரிய முயற்சி எடுக்கப்பட்ட நேரத்தில், தமிழ்நாடு காவல் துறை பல மாவட்டங்களில் அனுமதி மறுத்து தடை செய்திருக்கிறது. அங்கே தமிழ் மக்கள் பாதிக்கப்படுவது குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, இன்றைய தினம் அறிக்கை மூலமாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு வைத்திய சிகிச்சை செய்வதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். 35,000–த்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே அங்கே பாதிக்கப்படுகின்ற தமிழர்களுக்கு தமிழகத்திலே குரல் கொடுப்பதற்கும், போராடுவதற்கும் தடை என்பது, சரியான கருத்தாக இல்லையே? இந்தத் தடையை காவல் துறை விதிக்கிறதே, இதில் அரசுக்குச் சம்பந்தம் இருக்கிறதா? இல்லையா? அரசு இப்படிப்பட்ட இயக்கங்கள் நடத்துவதற்குத் தடை செய்வது என்பது, தமிழகத்தினுடைய உணர்வுகளை திசை திருப்புவதாக அமைந்துவிடுமே, இதைப் பற்றி அரசு என்ன கருதுகிறது? அந்தத் தடையை நீக்கி, இயக்கங்களை நடத்தச் செய்வதற்குரிய முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்பதை இந்த அவையின்மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11—20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன். நீங்கள் வேறு subject தானே பேசப்போகிறீர்கள்?

**திரு. தி. வேல்முருகன்:** ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈழத்தில் நடைபெறுகின்ற இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்தக் கோரி தன்னுயிரைத் தந்த தமிழ் மறவன் தமிழ்வேந்தனுடைய இறுதி ஊர்வலம், கடலூர் மாநகரில் புறப்பட்டுச் சென்றபோது, திடீரென்று எங்கோ ஒரு பகுதியிலிருந்து வந்த வன்முறைக் கும்பல் திட்டமிட்டு ஒரு தாக்குதலை நடத்தியது. அதையொட்டி 20,000—த்திற்கும் மேற்பட்ட தமிழறிஞர்கள், அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்கள் கலந்துகொண்ட ஊர்வலத்தின்மீது 500—க்கும் மேற்பட்ட காவலர்கள் தடியடி நடத்தி, 20,000 பேர்கள் கொண்ட கூட்டத்தையே நாலாபுறமும் சிதறி ஓட வைத்திருக்கிறார்கள். இதுகுறித்து ஒரு விரிவான... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக அறிக்கை பெற்று, நாளைக்கு பதில் சொல்வதாக ஏற்கெனவே தங்களிடம் தெரிவித்திருந்தோம். ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கின்ற கருத்துக்கள் மீது சரியான விவரங்கள் இல்லாமல் அமைச்சர்கள் பதில் சொல்வது சரியாக இருக்காது. எனவே, இதை நாளைக்கு எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன், நீங்கள்தான் முதலில் காலையில் எழுந்து பேச முயன்றீர்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலே ஒரு பிரச்சினை ஏற்படுகின்றபோது, அந்தப் பிரச்சினையினால் பொதுமக்களோ, அல்லது ஒரு இனமோ, அல்லது தொழிலாளர்களோ, மருத்துவர்களோ, எந்தத் துறையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அந்தப் பிரச்சினையின் தீவிரத்தை

மக்கள் கவனத்திற்குக் கொண்டு செல்வதற்கும், அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்வதற்கும் ஜனநாயகத்திலே பல வழிகள் வகுக்கப்பட்டுள்ளன. அந்த வகையிலே கண்டனப் பேரணி, ஊர்வலம், பொதுக் கூட்டம் மற்றும் மனிதச் சங்கிலி என்ற வழிகளைப் பயன்படுத்தி வருகின்றார்கள். இலங்கையிலே நடக்கின்ற தமிழர் படுகொலை பிரச்சினை குறித்து, இலங்கைத் தமிழர் இயக்கம் இப்போது தீவிரமாகப் பல போராட்டங்கள்மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றது. அந்தப் பிரச்சினை குறித்தும், High Court வளாகத்திலே வழக்கறிஞர்கள் தாக்கப்பட்டது குறித்தும், இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் அறப்போராட்டம் நடத்துவதற்கு, ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு அரசாங்கத்தின், காவல் துறையின் அனுமதியைப் பெற்று நடத்துவதற்குத் தடையிட்டு, திடீரென்று மறுத்திருப்பது எந்த வகையில் நியாயம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்களே, திரும்ப அதே subject–ஐத்தானே சொல்கிறீர்கள் நீங்கள்? (குறுக்கீடுகள்) எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) எனக்குத் தெரியும், உட்காருங்கள். திரு. இராமகிருஷ்ணன், இதை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்களும், திரு. இராமகிருஷ்ணன் அவர்களும் இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு ஆதரவாக (குறுக்கீடுகள்) (கூச்சல் குழப்பம்) அதில்லை, அவர்கள் ஊர்வலம் வைத்திருக்கிறார்கள்; நாளைக்கு...(குறுக்கீடுகள்) இன்றைக்கு மக்களுடைய பிரச்சினைகளைச் சொல்வதற்கு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உங்கள் கருத்தைப் பதிவு செய்தாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் அவரை உட்காரச் சொல்லக்கூடாது; நீங்கள் உட்காருங்கள். அவரை உட்காரச் சொல்வதற்கு உங்களுக்கு அதிகாரம் கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடு) No, no. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார். அதுகுறித்து விவரங்களை சேகரித்து நாளை எடுத்துக்கொள்ளலாம் என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதை விவரமாகச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய இராமகிருஷ்ணன் அவர்கள் ஏதோ ஊர்வலத்தை தடை செய்தார்கள் என்று சொன்னார். அதையொட்டித்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். அதுபற்றிப் பேசட்டும்; பதில் சொல்லலாம். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–25*

ஒரு குறிப்பிட்ட ஊர்வலம் நடைபெற்று அதிலே சில சம்பவங்கள் நடந்திருக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் கொண்டு வருகிறார். ஒரு specific incident நடைபெற்று முடிந்தது. அதுகுறித்து அரசு விளக்கம் பெற்று விவரமாகச் சொல்லும் என்று மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவர்கள் இப்பொழுது சொல்வது அவர்களுடைய பேச்சிலிருந்து நான் யூகித்துக்கொண்டது, ஏதோ ஓர் ஊர்வலத்திற்குத் தடை விதித்தார்கள் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அதுகூட இல்லை. இருந்தாலும், (கூச்சல்–குழப்பம்) இல்லை, இல்லை. நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இப்போது அதனால் — (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அதை நீங்கள் பேசினீர்கள், அவர் பேசினார், இவர் பேசினார். ஆகையினால், நான் என்ன சொல்கிறேன் என்றால், வேல்முருகன் பிரச்சினை வேறு, இவர்கள் பேசுகிற பிரச்சினை வேறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம், இதே பிரச்சினையைத்தான் பேசப் போகிறீர்களா? இந்தப் பிரச்சினை என்றால், நாளைக்கு அமைச்சர் பதில் சொல்லும்போது சொல்லலாம். (குறுக்கீடு) வேறு subject என்றால் பேசுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** இந்தப் பிரச்சினை இல்லை. திரு. வேல்முருகன் அவர்கள் பேசிய பிரச்சினை அல்ல. ஊர்வலத்திற்குத் தடை விதித்த பிரச்சினையைத்தான் பேச வருகிறேன். (குறுக்கீடுகள்) இன்றைக்கு தமிழகத்திலே சில கட்சிகள், சில இயக்கங்கள் (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள் . . .

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்களும் சரி, திரு. இராமகிருஷ்ணன் அவர்களும் சரி, தாங்கள் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப்பற்றி ஒரு hint கொடுத்தார்கள், இதைப்பற்றி பேசப் போகிறோம் என்று. அதை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். அந்தமாதிரி மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் கொடுத்திருக்கிற கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப்பற்றி hint கொடுப்பதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. அதனால் அவர் hint-ஓடு பேசுவார். தீர்மானத்தை விவாதத்திற்கு நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். அதைத்தான் அமைச்சர் சொல்லியிருக்கிறார். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், அவரைப் பேசக்கூடாது என்று சொல்வதற்கு உங்களுக்கு உரிமை இல்லை, உட்காருங்கள் முதலில். *(கூச்சல்–குழப்பம்)*

**திரு. வை. சிவபுண்ணியம்:** அவர்கள் பதில் சொன்னால், எங்களையும் பேச அனுமதிப்பீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பதில் சொல்லவில்லை, விடுங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்களும், திரு. இராமகிருஷ்ணன் அவர்களும், இலங்கைத் தமிழர் பாதுகாப்பு சார்பாகப் பேரணி நடத்துவதற்கும், கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கும் அனுமதி கேட்கப்பட்டது, மறுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். நான் இதை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னேன். இப்போது காவல் துறையிடமிருந்து வந்த செய்தியின் அடிப்படையில், அவர்கள் முதலில் இலங்கைத் தமிழர்களுக்காக இப்படி ஒரு போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்திருந்தார்கள், அதிலே எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் சொன்னதைப்போல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குக்கூட மத்திய அமைச்சகத்தை வலியுறுத்திக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். எங்களுக்குப் பதில் எழுத வேண்டும் என்றும் வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆனால், இலங்கைத் தமிழர்கள் என்று முதலில் அறிவித்துவிட்டு

அதற்குப் பிறகு, சென்னை உயர் நீதிமன்ற வளாக சம்பவத்தையொட்டி நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டம், பேரணி என்று மாற்றியிருக்கிறார்கள். இப்போது அனுமதி மறுக்கப்பட்டிருப்பது, சென்னை உயர் நீதிமன்ற வளாக சம்பவத்தையொட்டி என்று சொல்லியிருக்கக்கூடிய அந்தப் பிரச்சினை குறித்து, எந்த அனுமதியும் வழங்கப்படமாட்டாது என்றுதான் காவல் துறை மறுத்திருக்கிறதே தவிர, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக ஆர்ப்பாட்டம் நடத்துவதையும், பேரணி நடத்துவதையும் மறுக்கவில்லை. (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், இப்பொழுது நான் கேட்பது இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்தோ, அல்லது வழக்கறிஞர்கள் போராட்டம் குறித்தோ இந்த விஷயங்கள் வருகிறபொழுது, போராட்டம் நடத்துவது அல்லது தங்களுடைய எதிர்ப்பையோ அல்லது தங்களுடைய எண்ணத்தையோ வெளிப்படுத்துவதற்குத் தடை விதிக்கப்படுவது என்பது சரியா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர் நண்பர்கள் இலங்கையில் அவதிப்படுகிற தமிழர்களுக்காகத் தங்களுடைய ஆதரவைத் தெரிவிப்பதற்குப் போராட்ட முறைகளை, உள்ளிருப்பு, வெளியிருப்பு முறைகளைக் கையாண்டு வந்தார்கள், அதுவரையிலே எந்தப் பிரச்சினையும் இல்லை. அதுவரையிலே வழக்கறிஞர்களைப்பற்றி எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்களும் கோர்ட்டுக்கு முன்னால் இருந்து, கோர்ட்டுக்கு போகாமலிருந்து, வெளியிலிருந்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள். பிரச்சினை எப்போது ஆரம்பித்தது என்றால், சுப்பிரமணியன் சுவாமி என்கிற ஒரு நபர், எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல், அன்றைக்கு நீதிமன்றம் போவதற்குக்கூட எந்தவிதமான சந்தர்ப்பமும் இல்லாமல் உள்ளே போயிருக்கிறார். போயிருந்தபொழுது (குறுக்கீடு) சுப்பிரமணியன் சுவாமிக்கு இவ்வளவு வக்காலத்து வாங்குகிற காரணத்தால் சுப்பிரமணியன் சுவாமி அவர்களை அனுப்பியதே சில கட்சிகளாகத்தான் இருக்கும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–30

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** காரணம், அவர்மீது அழுகிய முட்டை வீசப்பட்டிருக்கிறது. எந்த வழக்கறிஞரும்—நானும் ஒரு வழக்கறிஞராக இருந்தவன்தான். இங்கிருக்கிற நம்முடைய உறுப்பினர் நண்பர்களில் சிலர் வழக்கறிஞர்களாக இருக்கிறார்கள். எந்த வழக்கறிஞரும்—பையிலே அழுகிய முட்டையை எடுத்துக்கொண்டு கோர்ட்டுக்குப் போகமாட்டார். இது ஏற்கெனவே திட்டமிட்ட செயலாக, சுப்பிரமணியன் சுவாமியை அங்கே அனுப்புவது, அவர்மீது இந்த அழுகின முட்டையை வீசுவது, அதன்மூலம் கலகம் விளைவிப்பது, அதிலே ஜாதிப் பிரச்சினையைக் கொண்டுவருவது என்று இப்படிப்பட்ட ஒரு நிலையை உருவாக்கியது அரசியலிலே இருக்கிற சில பேர். காரணம், இந்தப் பிரச்சினையின்மூலம் இந்த ஆட்சிக்குத் தொல்லை கொடுக்கவேண்டும் என்று சில பேர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் பத்து, பதினைந்து நாட்களிலே இந்த நாட்டிலே சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை வரும்; இந்த ஆட்சி கவிழ்ந்து போய்விடும்; பிறகு நாங்கள் ஆட்சி அமைக்கப் போகிறோம்; ஆட்சி அமைப்பது வெகுதூரத்தில் இல்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், வழக்கறிஞர் பிரச்சினை (குறுக்கீடுகள்) வழக்கறிஞர் பிரச்சினையாக இருக்கிற வரையில் இந்தப் பிரச்சினை இல்லை. (குறுக்கீடுகள்) சுப்பிரமணியன் சுவாமியை ஏவிவிட்டதன்மூலம் (குறுக்கீடுகள்) இந்த ஆட்சிக்குத் தொல்லை கொடுப்பதுபோலச் செய்தார்கள். ஆகையினாலேதான், இன்றைக்கு இந்தப் பிரச்சினையிலே இது திசைமாறிப் போய், (குறுக்கீடுகள்) இது அரசியலாக்கப்பட்டு தூண்டிவிடுகிற நிலைமைக்கு வந்திருக்கிற காரணத்தால், பஸ்களை எரிக்கச் சொல்வது, சிலர் தங்கள் ஆட்களையே வழக்கறிஞர் ரூபத்திலே கோர்ட்டுக்கு அனுப்புவது, இப்படிப்பட்ட துரோகச் செயலைச் செய்து, (குறுக்கீடுகள்) நான் எந்தக் கட்சியுடைய பெயரையும் குறிப்பிடவில்லை.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிப்பட்ட எந்தக் கட்சியையும் அவர் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** ஆனால் செய்கிறார்கள் என்று சொன்னவுடன் அ.தி.மு.க. நண்பர்கள் இவ்வளவு பேரும் எழுந்துகொள்வது ஏன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன் எல்லோரும் எழுந்திருக்கிறீர்கள்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** உங்களுக்கு ஏன் ரோஷம் வருகிறது? குற்றம் உள்ள நெஞ்சம் குறுகுறுக்கிறதா? செய்தீர்களா? அப்படியானால் சுப்பிரமணியன் சுவாமியும் உங்கள் தலைவியும் செய்த ஏற்பாடா இது? (குறுக்கீடு) நான் கேட்கவில்லை, கேட்கமாட்டேன். நான் கேட்கமாட்டேன். ஏனென்று கேட்டால், நீங்களாக எழுந்துவிட்டீர்கள். ஆகையினாலே, தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், அவர் ஒரு கட்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. உங்கள் கட்சி என்று சொல்லவில்லை. நீங்களாகவே ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்களாகவே ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** ஆகையினாலே, நாங்கள் இலங்கைத் தமிழர்களுக்காகப் போராடுகிறோம் என்று சொன்னவர்கள், அதை மாற்றிக்கொண்டு, இந்த ஆட்சியைக் கவிழ்க்கின்ற வேலையில் இறங்கியிருக்கிற காரணத்தால், இது அரசியல் என்ற காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழகமும் இதை அரசியலாகச் சந்திக்கும். ஆனால் ஒன்றை நீங்கள் ஞாபகத்திலே வைத்துக்கொள்ள வேண்டும். அந்தப் பிரச்சினையை . . . (குறுக்கீடுகள்) கொஞ்சம் உட்காருங்கள். அந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க வேண்டும் என்பதற்காக முதல்வர் அவர்கள், எவ்வளவு பெரிய ஒரு அறுவை சிகிச்சை, அவருடைய தண்டுவடத்தில்!— தண்டுவடத்திலே ஆபரேஷன் என்பது டிரான்ஸ்ஃபார்மரிலே கை வைப்பது போல; ஆனாலும்—அதையும் பொருட்படுத்தாமல் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.ம. வேலுசாமி, சத்தம் போடக் கூடாது. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** "அதற்காக வரவேண்டுமானாலும்கூட, நான் ஆம்புலன்ஸ் வண்டியிலே வந்து உயர் நீதிமன்ற நீதிபதியைப் பார்க்கிறேன்" என்று கடிதம் எழுதியிருக்கிறார். இன்றைக்கு அதற்கும் மேலாக, "வழக்கறிஞர் நண்பர்களுக்கும் போலீஸ் நண்பர்களுக்கும்

மோதல் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமானால், நானே உண்ணாவிரதம் இருப்பேன்" என்றும் சொல்லியிருக்கிறார். இவ்வளவு அறவழியிலே தன்னுடைய பணியை, அணுகுமுறையை வைத்திருக்கிற இந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்று கூட்டு சதி செய்து, திட்டமிட்டு, பல பிரச்சினைகளை உருவாக்குகிறபோது, அரசியல் என்று வந்துவிட்ட பிறகு, அதை அரசியலாகத்தான் நாங்கள் பார்க்க வேண்டும். நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் எழுந்து நிற்கக் கூடாது. எல்லோரும் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**செல்வி கே. பாலபாரதி:** பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சினைகளைப்பற்றிய கருத்துகளை இங்கே சொல்லிக்கொண்டிருந்தார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் எங்கேயோ சென்று, உயர் நீதிமன்றத்தில் ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி அவர்கள்மீது முட்டை வீசப்பட்ட பிரச்சினை குறித்து இங்கே பேசினார்கள். அந்தப் பிரச்சினை தற்போது நீதிமன்றத்தினுடைய விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வழக்கில் இருக்கக்கூடிய ஒரு பிரச்சினை. (குறுக்கீடுகள்) நான் முடித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** சொல்வதைக் கேளுங்கள். நான் சொல்லிவிடுகிறேன். நான் முதலிலேயே சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். வழக்கறிஞர் நண்பர்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நடத்திய போராட்டத்தின்போது எந்தவிதமான பிரச்சினையும் எழவில்லை. வழக்கறிஞர் நண்பர்கள் அவர்களுடைய எண்ணத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்தார்கள். ஆனால் சுப்பிரமணியன் சுவாமி என்ற நபர் நீதிமன்றத்திற்குள்ளே நுழைந்த பிறகுதான், அது திசைமாற்றப்பட்டு, வழக்கறிஞர்கள் versus போலீஸ் என்ற நிலை

உருவானது. ஆகவே, 'திரு. சுப்பிரமணியன் சுவாமியை (மணியடிக்கப்பெற்றது) சில அரசியல் கட்சிகள் ஏவியிருக்கின்றன' என்று சொன்னேனேதவிர, அதை அ.தி.மு.க. என்றோ, (குறுக்கீடுகள்) அவர்களுடைய தலைவி என்றோ நான் சொல்லவில்லை. 'அப்படியானால் நான் சந்தேகப்படுகிறேன்' என்று சொன்னேன். நீங்கள் எழுந்த காரணத்தால், அதிலே உங்களுக்குப் பங்களிப்பு இருக்குமோ என்று சந்தேகப்படுகிறேன். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) *மற்றவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்றத்தில் பிரச்சினை இரண்டு கட்டமாக நடைபெற்றிருக்கின்றது. முதல் கட்டம், திரு. சுப்பிரமணியன் சுவாமி அவர்கள் வேறு வழக்கிற்காக, அதாவது, சிதம்பரம் கோயிலினுடைய வழக்கிற்காக, நீதிமன்றத்திற்கு வழக்காடச் சென்றபோது, அவர்மீது முட்டை வீசப்பட்டது. அதுகுறித்து சில பிரச்சினைகள் எழுந்தன. உயர் நீதிமன்றத்தில் ஐந்து நீதிபதிகள் கொண்ட பெஞ்சு அதுகுறித்து விசாரிக்கும் என்று சொல்லி, அங்கே அந்த வழக்கு விசாரணையில் இருக்கின்றது.

அடுத்த நாள் வேறு பிரச்சினை அங்கே ஏற்பட்டது. இதற்கும், அதற்கும் சம்பந்தமில்லை. ஆனால், இங்கே மாண்புமிகு அமைச்சர், சட்டத் துறை அமைச்சராகவும் இருக்கின்றார்; (குறுக்கீடுகள்) அவர் தானாக முன்வந்து. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே. . (குறுக்கீடு)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *என்னங்க? என்னைப் பேச விடுங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *நாங்கள் பேசுவோம்; நீங்கள் எல்லோரும் கத்துகிறீர்கள் அல்லவா? (குறுக்கீடுகள்) என்ன? நாங்கள் பதில் சொல்கிறோம். (குறுக்கீடுகள்) பதில் சொல்கிறோம்; நீங்கள் சொல்வது தவறான செய்தி என்பதற்காகப் பதில் சொல்கிறோம். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பதில் சொல்லக் கூடாது என்று அர்த்தம் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுநாள் நடந்த பிரச்சினை குறித்து எல்லாப் பத்திரிகைகளிலும் வழக்கறிஞர்களே சொல்லியிருக்கிறார்கள். திரு. சுப்பிரமணியன் சுவாமியை ஒட்டிய பிரச்சினைதான் அன்றும் நடைபெற்றிருக்கிறது. முதல் நாள் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர்மீது F.I.R. போடவேண்டுமென்று வழக்கறிஞர்கள், அங்கேயிருக்கிற காவல் நிலையத்திற்குச் சென்று சொல்லித்தான், அதனுடைய தொடர்ச்சியாகத்தான் மறுநாள் பிரச்சினையும் நடந்திருக்கிறதே தவிர, ஈழப் பிரச்சினைக்கும், அதற்கும் சம்பந்தமில்லை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு கேள்வியை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. பன்னீர்செல்வத்திடம் கேட்கிறேன். திரு. சுப்பிரமணியன் சுவாமி நீதிமன்றத்திற்குப் போன பிறகுதான் பிரச்சினை திசை திரும்பியது என்று சொன்னால், உங்களுக்குக் கோபம் வருவானேன்? (குறுக்கீடுகள்) அதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள். திரு. சுப்பிரமணியன் சுவாமியைப்பற்றிப் பேசுகிறபோது, எல்லாக் கட்சிக்காரர்களும் அமைதியாக இருக்கிற காரணத்தால், உங்கள் பெயரை நான் இழுக்கவில்லை; உங்கள் கட்சியினுடைய பெயரை நான் சொல்லவில்லை. ஆனால், திரு. சுப்பிரமணியன் சுவாமிக்கு இவ்வளவு வக்காலத்து வாங்குகிற காரணத்தால், நான் ஐயப்படுகிறேன்; சந்தேகப்படுகிறேன். இத்தனைக்கும் பின்னணியில் அ.தி.மு.க.–தான் இருக்குமோ என்று ஐயுறுகிறேன். (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நான் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** தயவுசெய்து நான் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முடித்து விடட்டும் அம்மா. *(குறுக்கீடுகள்)* நீங்கள் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** என்னைச் சொல்ல விடமாட்டேன் என்கிறார்களே? *(குறுக்கீடுகள்)* ஏற்கெனவே, திரு. சுப்பிரமணியன் சுவாமிமீது முட்டை வீசப்பட்டதாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, F.I.R. பதிவு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் யாரெல்லாம் முட்டை வீசினார்கள் என்று சந்தேகிக்கப்படுகிறார்களோ, அவர்களைத் தேடுகின்ற நிலையில்தான் காவல் துறை இருந்திருக்கின்றது. இரண்டாவது கட்டத்திற்கு நான் செல்லவில்லை. ஆனால், முதல் கட்டத்தில் நீங்கள் சொன்ன வார்த்தை, 'அழுகிய முட்டைகளை வைத்துக்கொண்டு வழக்கறிஞர்கள் யாரும் உள்ளே போகமாட்டார்கள்' என்று சில பிரச்சினைகளை இங்கே சொன்னீர்கள். ஒரு சட்டத் துறை அமைச்சர், வழக்கு நீதிமன்றத்தில் இருக்கின்றபொழுது, வாதப் பிரதிவாதங்களை நீங்களே இங்கே, சட்டமன்றத்திலே கையிலே எடுத்துக்கொண்டு, *(குறுக்கீடுகள்)* அதில் கருத்துகள் சொல்வது என்பது, *(குறுக்கீடுகள்)* அதில் கருத்துகள் சொல்வது என்பது, எந்தவிதத்தில் நியாயம்? *(குறுக்கீடுகள்)* நான் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** எந்தவிதத்தில் நியாயம் என்றல்ல. *(குறுக்கீடு)* நானும் ஒரு வழக்கறிஞனாகப் பணியாற்றியவன். எனவே, வழக்கறிஞர்களுடைய மனோபாவம் எனக்குத் தெரியும். அவர்கள் போராடுவார்கள்; எல்லாம் செய்வார்களேதவிர, அழுகிய முட்டையை எடுத்துக்கொண்டு எந்த வழக்கறிஞரும் வீசமாட்டான். அப்படி வீசியிருக்கிற காரணத்தால், சமூக விரோதிகள் வீசியிருக்கிறார்கள் என்று சொல்கிறேன். ஆனால், உங்களுக்கு ஏன் வருத்தம் வருகிறது என்பதுதான் எனக்கிருக்கிற கேள்வி.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வாதமெல்லாம், யார் முட்டை கொண்டு வந்தார்கள், யார் வீசினார்கள் என்பதை அறிந்து அந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கிற கடமை காவல் துறையினருக்கு இருக்கின்றது; அது குறித்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கின்றது; அதில் ஒன்றும் பிரச்சினையில்லை. ஆனால், நீங்கள் உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் பேசினீர்கள். அதுவும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள், இந்தச் சட்டமன்றத்திலே, கோர்ட்டில் வாதப் பிரதிவாதங்கள் நடப்பது போன்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கின்றார்கள்.

இது தவறு; இது ஒரு சரியான மரபு அல்ல என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதற்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நீங்கள் முடிச்சுப் போடுவது தவறான செயல். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், இங்கே சட்டமன்றத்தில் எங்களைச் சம்பந்தப்படுத்தி, முடிச்சுப் போட்டு ஏற்கெனவே சொன்ன அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும். நான் இப்போதுதான், முதன்முதலாக எழுந்து நின்று எங்களுடைய கருத்துகளைச் சொல்லியிருக்கின்றேன். யாரும் எங்களுடைய கருத்துகளைப் பதிவு செய்யவில்லை. அந்த வழக்கிற்கு உள்ளே செல்லவில்லை. நீங்கள் சொன்னதை நாங்கள் திரித்துக் கூறவில்லை. நீங்கள் மேலும் மேலும் பல தவறான குற்றச்சாட்டுகளை இங்கே அடுக்கிக்கொண்டே போகின்றீர்கள். இவர்கள் வேறு காரணத்திற்காக எழுந்தார்கள். நீங்களே அதில் ஒரு மனக் கணக்கைப் போட்டுக்கொண்டு வாதம்பண்ணுவது சரியானதல்ல. இவர்கள் எழுந்ததனுடைய நோக்கம்—அரசுப் பொறுப்பில் இருக்கின்ற நீங்கள்—ஒரு நீதிமன்றத்திற்குள் முட்டை வீசுகின்ற அளவுக்குச் சட்டம்–ஒழுங்கு சீரழிந்து கிடக்கின்றதே என்பதைச் சுட்டிக்காட்டத்தான் எழுந்தார்கள். (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஆட்சியில் இருக்கிறபோது அதே சுப்பிரமணியன் சாமி (குறுக்கீடுகள்) கோர்ட்டுக்கு வந்தபோது, அடடா! அந்த அலங்கோலக் கண்ணராவிக் காட்சியைக் காட்டி, அன்றைக்குப் பார்த்த கண்கள், பாதி கண்கள் குருடாகவே ஆகிவிட்டன. (குறுக்கீடுகள்) அது அன்றைக்கு ஏற்பட்ட நிலைமை. ஆகவே, வெட்கமில்லாமல் அதைச் சொல்லலாமா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முடித்துவிட்டீர்கள். உங்கள் கருத்துகளைச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்ப எழுந்து நிற்கிறீர்களே? அவர்கள் அதற்குப் பதில் சொல்லவேண்டும். (குறுக்கீடுகள்) திரு. தி. வேல்முருகன், உட்காருங்கள். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள், திரு. சுப்பிரமணியன் சுவாமி நீதிமன்றத்திற்கு வந்ததுபற்றியும், அதனுடைய பின்னணி பற்றியும் அவருடைய ஐயத்தை எழுப்பினார். சுப்பிரமணியன் சுவாமிபற்றி அவருடைய ஐயத்தை எழுப்பியவுடனே, மூளி என்றவுடனே நீங்கள் ஏன் காதைத் தொட்டுப் பார்த்துக்கொள்கிறீர்கள்? (மணியடிக்கப்பெற்றது) உங்களைப்பற்றி அவர் சொல்லவில்லை. ஆனால், அதே சுப்பிரமணியன் சுவாமிக்கு நீங்கள் நீதிமன்றத்திலே ஒரு கறுப்புக் கொடி காட்டினீர்கள். எப்படி? ** (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இப்போது மணி 11–41. இன்று கேள்வி நேரம் முடிவுற்று, சில கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு நீங்கள் அனுமதி தந்தீர்கள். (குறுக்கீடுகள்) வரவு–செலவுத் திட்டத்தின்மீது விவாதிக்க வேண்டிய உறுப்பினர்கள், அவர்களுடைய விவாதத்தை வைப்பதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) இப்படி நீங்கள், யார் வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று அனுமதித்தால் பிறகு வரவு–செலவுத் திட்டத்தின்மீது விவாதம் நடைபெறுவதற்கான வாய்ப்பே இருக்காது. (குறுக்கீடுகள்) எனவே, தயவுசெய்து, அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுத்த முடிவின்படி வரவு–செலவுத் திட்டத்தின்மீது உறுப்பினர்களைப் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவை நாளை எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மற்றவை நாளை எடுத்துக்கொள்ளப்படும் (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மற்றவையெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) நாளை எடுத்துக்கொள்ளப்படும். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் சொன்ன அந்த வார்த்தைகளை தயவுகூர்ந்து அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) போதும். மற்றவையெல்லாம் ஆய்வில் இருக்கின்றன. நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

## 6. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா அவர்கள். (குறுக்கீடுகள்) நாளை எடுத்துக்கொள்ளலாம்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்தேழு முதல் நூற்று நாற்பது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 7. வரவு–செலவுத் திட்டம், 2009–2010, பொது விவாதம்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2009–2010 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம் தொடர்ச்சி. (குறுக்கீடுகள்) இன்றைய தினம் (குறுக்கீடுகள்) திரு. கே. மகேந்திரன், நான் hearing aid வைத்துக்கொள்ளவில்லை. எனக்கு நன்றாகக் கேட்கிறது. அமைதியாக உட்காருங்கள். 2009–2010 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். இன்று 10 உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன், அ.இ.அ.தி.மு.க. சார்பாகப் பேசுவார். ஒதுக்கப்பட்ட நேரம் 20 நிமிடங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த subject–க்குப் போயாகிவிட்டது. இனி எடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) எதையும் எடுக்கமாட்டேன். No. (குறுக்கீடுகள்) திரு. ஆ. அருண்மொழிதேவன், பேசுங்கள்.

***திரு. ஆ. அருண்மொழிதேவன்:** இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த எங்களுடைய இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) நேரம் ஒதுக்கித் தந்த தங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, (குறுக்கீடுகள்) முதலிலே என்னுடைய சிதம்பரம் தொகுதியினுடைய ஒருசில பிரச்சினைகளை இந்த மன்றத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) சிதம்பரத்திலே (குறுக்கீடுகள்) சிதம்பரம் நகரமானது (குறுக்கீடுகள்) Sir, பேச முடியவில்லை. சத்தம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். உங்களுக்கு 'மைக்' இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-45*

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** சிதம்பரம் நகரம் கடந்த ஐந்து ஆண்டுகளில் நான்கு முறை கடுமையான வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, தேர் ஓடும் வீதிகளைத் தவிர, மற்ற அனைத்துப் பகுதிகளும் நீரால் சூழப்பட்டு, வெள்ள நீர் தெருக்களிலும், வீடுகளிலும் உட்புகுந்து, மக்கள் எல்லாம் கடுமையான பாதிப்புக்குள்ளான நிலைமையை நாங்கள் எல்லாம் நேரிலே கண்டு, மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி, அடுத்த subject-க்குப் போயாகிவிட்டது. நீங்கள் கொடுத்துள்ள மற்றப் பிரச்சினைகள் எல்லாம் ஆய்வில் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) எல்லாம் ஆய்வில் இருக்கின்றன. நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆ. அருண்மொழிதேவன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து நான் மற்றக் கட்சித் தோழர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம் என்பது, நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவிலே நேரத்தை ஒதுக்கி ஒவ்வொரு கட்சிக்கும் இவ்வளவு நேரம் ஒதுக்கப்படும் என்று

தெரிவித்து, இன்று பேரவைத் தலைவர் அவர்கள் மிக தாராளமாக பத்தரை மணியிலிருந்து, ஏறக்குறைய ஒன்றேகால் மணி நேரம் மற்றப் பிரச்சினைகளை விவாதிப்பதற்கு அனுமதியும் தந்து, அதற்குப் பிறகும் நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம் நடத்தவில்லையென்றால், பிறகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டிய அவசியமே இருக்காது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்களை, செல்வி கே. பாலபாரதி உட்பட அனைவரையும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் நாளைக்கு zero hour- இல் நீங்கள் எழுப்புவதற்குப் பேரவைத் தலைவர் அனுமதி வழங்குவார். நாளைக்கு பதில் தரப்படும். (குறுக்கீடுகள்)

## 5. இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்தும், சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் காவல் துறையினர் மற்றும் வழக்கறிஞர்களிடையே ஏற்பட்ட மோதல் குறித்தும், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கண்டன ஊர்வலங்கள் நடத்த அனுமதி கோருதல்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? சொல்லுங்கள். முதலில் செல்வி கே. பாலபாரதி சொல்லட்டும். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் உட்காருங்கள், வாய்ப்புத் தருகிறேன். செல்வி கே. பாலபாரதி, ஒரே வார்த்தையில் சொல்லி முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரம்ப போராடி இந்த அனுமதியை வாங்குவது என்பது கஷ்டமாக இருக்கிறது. ஏனென்றால். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போதுதான் zero hour கிடையாது என்று திரு. நன்மாறன் சொல்லிக்கொண்டிருந்தாரே? (குறுக்கீடு) Zero hour–ல் மற்றப் பிரச்சினைகளை விவாதிக்க எவ்வளவு நேரம் கொடுத்திருக்கிறேன் என்பதைப் பார்த்தீர்களா?

**செல்வி கே. பாலபாரதி:** ஒரு நிமிடத்தில் என்னுடைய கருத்தை நான் சொல்லிவிடுகிறேன். ஏற்கெனவே உயர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றிருக்கக்கூடிய கடுமையான அந்தச் சம்பவம் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்றையதினம் 110–வது விதியின்கீழ் ஓர் அறிக்கை வாசித்தார்கள். அதன்மீது கருத்துச் சொல்ல எழுந்து அனுமதி கேட்டோம்; மறுக்கப்பட்டது. 110–வது விதியின்கீழ் அனுமதி மறுக்கப்பட்டதில் மீண்டும் ஒரு புது விளக்கத்தை மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் தருவது எந்தவகையில் சரியாக இருக்கும் என்று மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் சொல்ல வேண்டும். இது ஒன்று.

இரண்டாவது C.B.I. விசாரணைக்கு என்று அனுப்பியாகிவிட்டது. இதில் இரண்டு துறைகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. காவல் துறையும் முக்கியமானது, வழக்கறிஞர்கள் குறித்த துறையும் முக்கியமானது. சமூகத்திலே இரண்டு முக்கியமான துறையினர் ஒருவருக்கொருவர் எதிராளியாக நின்றுகொண்டிருக்கிறார்கள். நாமும் கீழே போய் பதில் சொல்ல வேண்டாமா? காவல் துறை வழக்கறிஞர்களைக் கடுமையாகத் தாக்கியிருக்கிறது. காவல் நிலையம் எரிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய சம்பவத்தின்மீது அன்று 110–வது விதியின்கீழ் ஒரு கருத்தும், இன்றைக்கு ஒரு கருத்தும் சொல்வது ஏற்புடையதாக இல்லை. ஆகவே, சமூகத்தில் இந்தக் காவல் துறையினர் சுப்பிரமணியன் சுவாமியா, வேறு சாமியா என்பது அல்ல பிரச்சினை; ஒரு தனிப்பட்ட நபர் உயர் நீதிமன்ற வளாகத்தில் வருகிறபோது அவர்மீது முட்டை வீசுவது எந்தவகையில் சரியாக இருக்கும்? அப்படி வீசியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கைது செய்யப்பட வேண்டுமென்பதில் மாற்றுக் கருத்து இல்லை. (குறுக்கீடு) ஆனால் அதற்காக இந்தச் சம்பவம்— வழக்கறிஞர்கள்மீது வன்முறைத் தாக்குதலுக்குக் காவல் துறை செல்வதும், மதுரையில் டி.ஐ.ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் துப்பாக்கி எடுத்துக்கொண்டு வெளியிலே தெருவிலே நடக்கின்றார் என்றால் நாம் சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படி வெளியிலே போக முடியும்? மக்கள் கேட்க மாட்டார்களா? இதைப்பற்றி எங்களுடைய கருத்தை நாங்கள் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறோமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. நாளைக்குப் பேசலாம் என்பது எல்லாம் சரி. ஆனால் அவசரமான பிரச்சினைமீது இன்றைக்குப் பேச வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாலபாரதி அவர்கள் சொன்னார்கள். C.B.I.–க்கு உத்தரவிட்டபிறகு, அந்த வழக்குக்குள்ளே போய், அந்த வழக்கினுடைய பிரச்சினைப்பற்றி சொல்லலாமா என்று கேட்டார்கள். நான் இப்போதுகூட வழக்குக்குள்ளே போகவில்லை.

82 இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்தும், சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் காவல் துறையினர் மற்றும் வழக்கறிஞர்களிடையே ஏற்பட்ட மோதல் குறித்தும், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கண்டன ஊர்வலங்கள் நடத்த அனுமதி கோருதல்

[திரு. துரைமுருகன்] [2009 பிப்ரவரி 23

நான் எந்தப் பிரச்சினை குறித்துச் சொன்னேன் என்றால், (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். இந்தப் பிரச்சினை குறித்து, இலங்கைத் தமிழர்களுக்காக தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்குக்கூட யாருக்கும் உரிமையில்லையா, வழிக்கறிஞர்களுக்கு இல்லையா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டபொழுது, "இலங்கைத் தமிழர்களுக்காக வழக்கறிஞர்கள் தங்களுடைய அதிருப்தியை, ஆர்பாட்டத்தை, கருத்தைச் சொல்வதற்கு உரிமையுண்டு. அதிலே எப்பொழுதும் இந்த அரசாங்கம் தலையிடவில்லை. அதுவரையில் இந்த அரசாங்கம் அனுமதித்துக் கொண்டுதான் இருந்தது. ஆனால், பிரச்சினை எங்கே ஆரம்பித்தது என்றால், அது வேறுவிதமாக மாறி, இலங்கைப் பிரச்சினை மாறி, சுப்பிரமணியன் சுவாமி வந்த பிறகுதான் இலங்கைப் பிரச்சினை, வழக்கறிஞர்கள் Vs. போலீஸ் என்று மாறியிருக்கிறது. ஆகையால், அரசியலாக மாற்றப்பட்டிருக்கின்ற காரணத்தால், சில அரசியல்வாதிகள் அதன் பின்னால் இருப்பார்கள்" என்று சொன்னேனே தவிர, வழக்கினிலே இவர்களல்ல, அவர்கள் அல்ல என்று சொல்லவில்லை.

*முற்பகல் 11–50*

இரண்டாவதாக, சொன்னார்; அழுகிய முட்டையை யார் வீசினாலும் தவறு என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால், எனக்கு ஒரு நம்பிக்கை. இதை எப்பொழுதும் சொல்வதற்கு எனக்கு உரிமையுண்டு, நான் ஒரு வழக்கறிஞர் என்ற முறையில். ஒரு வழக்கறிஞராக இருக்கிறவன், எவ்வளவுதான் தன்னுடைய வருத்தத்தைத் தெரிவிப்பதாக இருந்தாலும், கோர்ட்டுக்குப் போகிறபொழுது, பாக்கெட்டிலே அழுகிய முட்டையுடன் போயிருக்க முடியாது. அதை நான் எந்த மேடையிலும் சொல்வேன். வழக்கறிஞர்கள், வழக்கறிஞராக இருக்கிறவன், படித்தவன்; அந்த வேலையைச் செய்ய மாட்டான் என்பதிலே எனக்கிருக்கிற அந்த எண்ணத்தை வெளியிட்டேனே தவிர, வழக்கிற்குள் நான் செல்லவில்லை.

மூன்றாவதாக, உறுப்பினர் பாலபாரதி அவர்கள் சரியாகப் பேசினார்கள். ஒரு பக்கத்திலே போலீஸ் அடிபட்டிருக்கிறார்கள்; அரசாங்கச் சொத்துக்கள் எரிக்கப்பட்டிருக்கின்றன; மறுபக்கத்திலே வழக்கறிஞர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அரசாங்கத்தினுடைய சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டியது ஓர் அரசினுடைய கடமையாகும். அதற்காகத்தான் இந்த அரசு, யாரோ

சிலபேர் வழக்கறிஞர் போர்வையிலே, சில unwanted elements, சமூக விரோதிகள் நுழைந்துவிடக் கூடாது என்று சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோமே தவிர, வேறு ஒன்றுமில்லை. ஆகையினால், இதைப் பயன்படுத்தி, அரசியலாக்குவதை அரசு சந்திக்கும் என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையை, தாங்கள் நினைக்கின்ற ஒரு கருத்தின் அடிப்படையில், விவாதத்தைத் தொடருவதற்கு, தொடர்ந்து விவாதம் நடைபெறுவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் முயற்சிப்பது நியாயமில்லை. திரு. துரைமுருகன் ஓர் அமைச்சர். அன்றைக்கு விதி 110–ல், அம்மையார் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினையிலே, 110 என்ற அந்தத் தலைப்பிலே ஒரு கருத்தைச் சொன்னால், அதில் தொடர்ந்து விவாதம் செய்ய அவையை அனுமதிக்கக் கூடாது என்று விதியிலே இருக்கிறது. ஆகவே, அன்றைக்கு அனுமதிக்கவில்லை. ஆனால், மறுபடியும் ஒரு கருத்தைச் சொல்லலாமா என்றால், இது அதற்கு மாறான கருத்து அல்ல. மேலும் மேலும் பிரச்சினை வளர்கிறபோது, இந்த அவையில் அந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறபோது, பதில் சொல்ல வேண்டிய அவசியம் சட்டத் துறை அமைச்சருக்கு ஏற்படுகிறது. அதற்காகச் சொன்ன பதிலே தவிர, அது வேறல்ல.

இன்னும்கூட ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அவர் சொன்ன எந்த விளக்கமும் அ.தி.மு.க. கட்சியையோ, அ.தி.மு.க. தலைவரையோ நேரடியாகக் குறிப்பிடுவது அல்ல. அரசியலில் ஒருவரையும் நேரடியாகக் குறிப்பிட்டு, அவர் யாரையும் குற்றம் சொல்லவில்லை. ஆனால், குற்றவாளிகள் வெளியிலே இருக்கலாம். அந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது காவல் துறையினுடைய பணி. இரண்டாவது, நீதிமன்ற வளாகத்திலே நடைபெற்ற நிகழ்ச்சி வேறு. காவல் துறையினுடைய கடமை என்ற முறையில், நாடு முழுவதும் அவர்கள் செய்கிற பணிகள் வேறு. இரண்டையும் ஒன்றாக்கி இதனோடு அதனை இணைக்கக் கூடாது. நீதிமன்றத்திற்குள்ளே நடைபெற்ற எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், அது சி.பி.ஐ. விசாரணைக்கு உட்பட்டது. அங்கே நடைபெற்ற நிகழ்ச்சியைப்பற்றிக் குறை சொல்வதும், அல்லது நடைபெற்றதிலே இன்னார்மீது குற்றம் என்று சொல்வதும்தான் தவறே தவிர, அதற்கான சூழ்நிலை

காரணங்களை விளக்குவது தவறல்ல. ஆனால், இன்றைக்கு முதலில் எடுத்துக்கொள்ளப்பட்ட அந்தப் பிரச்சினையின் அடிப்படையில், தொடர்ந்து விவாதிக்க அனுமதிப்பது முறையல்ல. அப்படி விவாதிக்க அனுமதிக்கப்படுமானால், அது விதிமுறைகளையே மீறிய காரியமாகும். ஆகவே, பேரவைத் தலைவர் அவர்கள், மேலும் விவாதிக்க அனுமதிக்கக் கூடாது என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாளைக்கு அவைக்கு வரப் போவதில்லையா? நாளைக்கு அவர்கள் உறுப்பினர்களாக இல்லையா? நாளைக்கும் இந்த அவை நடைபெறும். நாளைக்கு அவர்கள் பேசலாம். அவர்கள் நினைத்தபடி dictate செய்வதற்கு அவை உடன்படக் கூடாது. அவைத் தலைவருடைய உரிமை மறுக்கப்படுகிறது. *(குறுக்கீடு)* கடந்த காலத்தில் அவைத் தலைவருக்கு எவ்வளவு உரிமை இருந்தது என்று கேட்டால், ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறபோதே, உறுப்பினர் பேசுகிறபோதே, அவைத் தலைவர் பேச்சை நிறுத்திவிடுவார். அப்படியிருந்தது ஒரு காலம். அப்படியெல்லாம் அவைத் தலைவர், அவர்கள் பேச்சை அடக்க வேண்டுமென்று கலைஞர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் விரும்புவதில்லை. ஆனால், அவையைத் தாங்கள் விரும்புகிற அளவிற்கு, தாங்கள் நடத்துகிற வாதத்திற்கு அவை இடம் தரவேண்டுமென்று ஒவ்வொரு உறுப்பினரும், அல்லது தலைவர்களும் வலியுறுத்துகிறபோது, அவை அதற்கு இடம் தரக்கூடாது. அது அவைத் தலைவருடைய பொறுப்பு என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11–55*

## 7. வரவு–செலவுத் திட்டம், 2009–2010, பொது விவாதம்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. அருண்மொழிதேவன், பேசுங்கள். உங்களுக்கு 20 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகரத்தைச் சுற்றியிருக்கக்கூடிய அந்த வடிகாலையெல்லாம் முறையாகத் தூர் வாரி, தேவையான இடங்களிலே concrete கரைகளை அமைத்து, சிதம்பரம் நகரத்திலே